**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

11.03.2026

C.O.S. No. 2/2024

P.W. 1 திரு.ராஜபிரவின்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதி தரப்பில்) -**

இந்த வழக்கில் வா.சா.ஆ. 15 மற்றும் 16 ஆவணங்களுக்கும், எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் இவை தேவையேற்ற ஆவணங்கள் என்றால் சரியல்ல. எங்களிடம் Supervisor ஆக இருந்தவரின் ஆவணங்கள். அவர் 2 வது சாட்சியாக இந்த வழக்கில் விசாரணை செய்யப்பட்டபோது இந்த ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் ஒப்பந்ததாரர் தகுதி 5 ஆம் வகுப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதல்நிலை ஒப்பந்தத்தாரராக அந்த ஒப்பந்தத்தில் கலந்து கொண்டேன். அவ்வாறு அந்த ஒப்பந்தத்தில் கலந்து கொண்டதை காட்டும் ஆவணம் எதையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

வா.சா.ஆ. 18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டில் கடைசி பக்கத்தில் 4 ஆம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அது எங்களுக்கு திங்கள் சந்தை டவுண் பஞ்சாயத்தின் Junior Engineer மற்றும் EO தந்தது. அவ்வாறு

தருவதாக இருந்தால் 1 ஆம் பிரதிவாதி, 4 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகள் கையொப்பம் செய்துதான் தர வேண்டும் என்றால் அவர்கள் இவ்வாறு தான் தந்து வேலை செய்ய சொன்னார்கள், வேலை செய்தேன்.

அந்த ஆவணத்தில் 1 ஆம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். 4 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகள் கையொப்பம் உள்ளது. அவர்கள்தான் அந்த வேலையை செய்ய சொன்னார்கள். 4 ஆம் பிரதிவாதி கடைசி பக்கத்தில் கையொப்பம் செய்யாததால் அந்த ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 18 ல் Tender Schedule என்ற பகுதியில் EO கையொப்பம் கிடையாது என்றாலும் அதே போல 4, 5, 6 மற்றும் 8 ஆம் காளத்தில் ஒவ்வொரு வேலைக்கான தொகையும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் அந்த Tender Schedule ல் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் அவர்களுடைய Rate ஐ பூர்த்தி செய்து தருவதற்காக அந்த காளங்கள் காலியாக விடப்பட்டுள்ளது. திங்கள் நகர் டவுண் பஞ்சாயத்தின் Junior Engineer, Assistant Executive Engineer அந்த ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளார்கள்.

வா.சா.ஆ. 19 வது ஆவணத்தில் 4 ஆம் பிரதிவாதியான Assistant Executive Engineer கையொப்பம் இல்லை என்றால் சரிதான். Junior Engineer கையொப்பம் உள்ளது.

அதே போல வா.சா.ஆ. 19 ன் Tender Schedule லும் 1 ஆம் பிரதிவாதி, 4 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகளின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல, 5 ஆம் பிரதிவாதியின் கையொப்பம் உள்ளது. 5 ஆம் பிரதிவாதியின் கையொப்பமும் ஒரே

ஒரு இடத்தில்தான் உ ள்ளது என்றால் ஆமாம்.

வா.சா.ஆ. 19 ல் கடைசி பக்கத்திலும் ஒரு இடத்தில்தான் அதுவும் Junior Engineer கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணமும் நாங்கள்தான் பூர்த்தி செய்து அதன்பிறகு எங்கள் கையொப்பத்துடன் விண்ணப்பித்துள்ளோம்.

வா.சா.ஆ. 18 மற்றும் 19 ஆவணத்தை நாங்கள் பூர்த்தி செய்து அதில் கையொப்பம் செய்து 1 ஆம் பிரதிவாதியிடம் விண்ணப்பித்தோம் என சொல்கிறேனா என்றால் அந்த ஆவணத்தில் உள்ள Tender Schedule ஐ பூர்த்தி செய்து அதில் கையொப்பம் செய்து 1 ஆம் பிரதிவாதியிடம் விண்ணப்பித்துள்ளோம். அவ்வாறு பூர்த்தி செய்து சமர்ப்பித்ததாக சொல்லும் Tender Schedule ன் நகலை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் அந்த Tender ஐ எனக்கு தகுதி இல்லாத காரணத்தினால் 1 ஆம் பிரதிவாதியிடம் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ. 20 ஆவணத்தில் Assistant Executive Engineer கையொப்பம் இல்லை என்றால் சரிதான், Junior Engineer கையொப்பம் உள்ளது. அந்த கடிதம் Junior Engineer, செயல் அலுவலருக்கு கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். இந்த கடிதம் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் Junior Engineer கொடுத்தார். வா.சா.ஆ. 20 ல் எனக்கு அவ்வாறு ஒரு நகல் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

எந்த மாதம், எந்த தேதி, எந்த வருடத்தில் அந்த கடிதம் Junior Engineer ஆல் 1 ஆம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால்

இல்லை. கையொப்பத்தில் தேதி உள்ளது. அந்த கடிதம் 1 ஆம் பிரதிவாதி பெற்றுக் கொண்டாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதை பெற்றுக் கொண்டபிறகுதான் ஒப்பந்தபுள்ளி கோரினார்கள். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. Junior Engineer 1 ஆம் பிரதிவாதியிடம் கொடுத்ததை நேரில் பார்த்தேன்.

கூடுதலாக வேலை செய்ய வேண்டியிருந்தால் 4 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகளால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன் அடிப்படையில்தான் ஒப்பந்தபுள்ளி கோரப்பட வேண்டும் என்றால் சரிதான். ஆனால் இந்த வேலையில் ஏற்கனவே கோரிய ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டிருந்த வரைபடம் மற்றும் Estimate ஐ வேலை நடந்து கொண்டிருக்கும்போது Executive Engineer, Junior Engineer, Assistant Executive Engineer மற்றும் EO ஆகியோர் மாற்றி விட்டார்கள். அதனால் இவ்வாறு செய்துள்ளார்கள். அவ்வாறு மாற்றியதாக சொல்லும் வரைபடம் மற்றும் Estimate நகலை என்னிடம் தந்தார்களா என்றால் வரைபடம கொடுக்கவில்லை, Estimate தந்தார்கள். அவை தான் வா.சா.ஆ. 18 மற்றும் 19.

ஒரு முறை ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்ட பிறகு அந்த வரைபடம் மற்றும் Estimate எங்கள் விருப்பத்தின்படி மாற்ற முடியாது என்றால் சரிதான். ஆனால் Executive Engineer, Junior Engineer, Assistant Executive Engineer மற்றும் EO ஆகியோர் மாற்றினார்கள். அவர்கள் அப்படி எந்த ஒரு மாற்றமும் செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

வா.சா.ஆ. 18 மற்றும் 19 ஆவணங்களில் 06.09.2022 மற்றும் 07.07.2022 ஆகிய தேதிகளில் 4 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகள் கையொப்பம் போட்டதாக உள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 21 ஆவணத்தில் தீர்மானம் 26.02.2021 அன்று அங்கீகரிக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அதில் ரூபாய் 14,09,334/- ஐ பேரூராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றத்திற்கு அனுமதி அளிப்பதாக தீர்மானம் உள்ளது என்றால் சரிதான். அப்பா செய்த வேலை மதீப்பீட்டைவிட கூடுதலாக வேலை செய்த வகையில் M.Book ல் குறிப்பிடப்பட்டிருந்த தொகையை கொடுப்பதற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அது. அதற்கு மேலும் அப்பாவால் வேலை செய்யப்பட்டிருந்தது. யாரால் அந்த கூடுதல் வேலை செய்யப்பட்டது என்ற விவரம் அந்த தீர்மானத்தில் உள்ளதா என்றால் இல்லை, ஒப்பந்ததாரர் என உள்ளது.

தீர்மானம் புத்தகத்தில் நகலை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்கவில்லை என்றாலும் தகவல்தான் கேட்டிருந்தேன் என்றாலும் சரிதான். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆவணம் நீதிமன்றத்தில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. அந்த தீர்மானம் கோப்புகள் எதுவும் பார்வைக்கு சமர்ப்பிக்காததால் ஒப்பந்தவிதிகள் முறையாக கடைபிடித்திருந்தால் அங்கீகரிக்கப்படுகிறது என்றும் குறைவாகவோ, இழப்போ இருந்தார் செயல் அலுவலரே பொறுப்பு என்றும், கூறிதான் அந்த தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அதன் அடிப்படையில்தான் பேரூராட்சி கண்காணிப்பாளர் பொறியாளருக்கு 1 ஆம் பிரதிவாதி

கடிதம் எழுதினார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

1 ஆம் பிரதிவாதி பேரூராட்சி கண்காணிப்பாளர் பொறியாளருக்கு எழுதிய வா.சா.ஆ. 21 ஆவணத்தின் படி அந்த தீர்மானத்திற்கு எந்த ஒரு ஒப்புதலும் அளிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. M.Book ல் ஒப்புதல் அளித்துள்ளார். M.Book ல் உள்ள விவரங்களை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்றால் நான் பார்த்துள்ளேன். அதனால் நகல் வாங்கவில்லை.

1 ஆம் பிரதிவாதி பேரூராட்சி கண்காணிப்பாளர் பொறியாளருக்கு எழுதிய வா.சா.ஆ. 21 ஆவணத்தின் படி அந்த தீர்மானத்திற்கு எந்த ஒரு ஒப்புதலும் அளிக்கப்படவில்லை என்ற விவரம் எனக்கு தெரியும் என்பதால்தான் வா.சா.ஆ. 17 முதல் 21 வரையில் உள்ள ஆவணங்கள் குறித்து பிராதிலும், முதன்மை சாட்சியத்திலும் எந்த ஒரு விவரமும் கூறவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் கொடுத்துள்ளார், எங்களுக்கு தெரியும்.

நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு எந்த ஒரு பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.